# பாரதிய ஜனதா கட்சி

(தலைமை அலுவலகம்)
11, அசோக் சாலை, புது தில்லி – 110001
**தொலைபேசி :** 23005700; ஃபேக்ஸ் **:** 23005787

**தேதி:** ஃபிப்ரவரி 03, 2014

**<u>தேசிய செய்தி தொடர்பாளர் திருமதி நிர்மலா சீதாராமன் வெளியிட்ட ஊடக அறிக்கை</u>**

திரு நரேந்திர மோடி, குஜராத் பா.ஜ.க மற்றும் குஜராத் அரசை குறிவைப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்துவதில் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டாவது சிந்தனை இருப்பதில்லை. இந்த முறையும், எந்த கள ஆய்வும் மேற்கொள்ளாமல் அவர்கள் ஒரு விஷயத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். ஆனால் அதை உற்று கவனித்தால் காங்கிரஸின் தோல்வியைத்தான் வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதாக அமைந்துள்ளது. .

வருமானம் அல்லது நுகர்வுச் செலவின் அடிப்படையில் வறுமையை வரையறுப்பது முற்றிலும் மத்திய அரசின் பணியாகும். மத்திய அரசால் திருத்தம் செய்யப்பட்ட விகிதம் கொண்டுவரப்பட்டால்கூட சம்பந்தப்பட்ட மத்திய அரசு துறையின் உத்தரவு இல்லாமல் மாநில அரசுகளுக்கு திருத்தத்துக்கான அளவுகோலைப் பயன்படுத்துவதற்கான உரிமை இல்லை. .நகர்ப்புற பகுதிகளில் ரூபாய் 501, கிராமப்புறங்களீல் ரூ.324 ஆகியவைதான் 2004இல் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தனி நபர் வருமான அளவுகோல்கள். இவை குஜராத்தில் இருக்கும் உணவு மற்றும் நுகர் பொருள் வாணிப கழகத்துக்கு இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் என்று குஜராத் அரசால் தெரிவிக்கப்பட்டன. இந்த அளவுகோல்கள் குஜராத் அரசால் நிர்ணயிக்கப்பட்டவை அல்ல .வ்ருமானம் மட்டுமல்லாமல் மற்ற சொத்துகளான தொலைகாட்சி, வானொலி அல்லது மிதிவண்டி ஆகியவை வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்கள் யாவர் என்று தீர்மானிப்பதற்கான அளவுகோல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த செயல்முறை சொத்தின் அடிப்படையிலான அளவுகோல் என்று அழைக்கப்படுகிறது.

மத்திய அரசின் சொத்து அடிப்படையிலான அளவுகோலின் படி குஜராத்தில் 21 லட்சம் குடும்பங்கள் மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வருகின்றன. . ஆயினும், இந்த எண்ணிக்கை இந்தப் பிரிவில் வரவேண்டியவர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, குஜராத் அரசு, இதே அளவுகோலை நீட்டித்து மேலும் 11 லட்சம் குடும்பங்களை தன் சொந்த செலவில் வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவர்களாக அடையாளப்படுத்தியது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இந்த 11 லட்சம் குடும்பங்களும் குஜராத் அரசால் வழஙப்படும் முழு மானியமளிக்கப்பட்ட தானியங்களைப் பெறுகின்றன. எனவே மொத்தமாக 32 லட்சம் குடும்பங்கள் பயனடைந்துவருகின்றன. வெறும் 21 லட்சம் குடும்பங்கள் அல்ல. இந்த செயல்முறையை 'மிகச் சிறந்த வறுமை நீக்கும் திட்டம்' என்று உச்ச. நீதிமன்றம் பாராட்டியுள்ளது.

வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களை வரையறுப்பதற்கான அளவுகோல்களில் உடனடியாக திருத்தம் செய்வதற்கான அவசியத்தை வலியுறுத்தி குஜராத் அரசு மத்திய அரசுக்கு 2004 முதல் பல கடிதங்களை எழுதியுள்ளது. ஆனால் அவை கவனிக்கப்படவில்லை. கடந்த பத்தாண்டுகளாக வெவ்வேறு ஆணையங்கள் இந்த பிரச்சினைக்காக அமைக்கப்பட்டுவிட்டன. ஆனால் அளவுகோல்கள் மாற்றப்படவில்லை . காங்கிரஸ் இப்போது சரியாக கவனப்படுத்தியுள்ளதுபோல், திரு நரேந்திர மோடி திட்ட கமிஷனை கண்டித்திருந்தால், அந்த கண்டிப்பும், கவனிக்கப்படாத 10 ஆண்டுகால கோரிக்கையின் பகுதியாக மாறியிருக்கும். .

எனவே, காங்கிரஸ் கட்சி சீற்றத்துடன் குஜராத் முதல்வரை விமர்சிக்க தொடங்கியிருப்பது அந்த தவறு அவர்களுடையதுதான் என்பதை சரியாக உணராததால்தான். .இந்த வாதத்தை நிரூபிக்கத்தான் வேண்டுமென்றால், அளவுகோல்களை திருத்தச் சொல்லி மத்திய அரசுக்கு அனுப்பிய நினைவூட்டும் கடிதங்களின் தேதிகளை குஜராத் அரசு வெளியிட முடியும் என்பதை பா.ஜ.க உறுதியாக நம்புகிறது

**பழிசுமத்துவதற்கான உரிமையும் அரச போலித்தன்மைக்கான உரிமையும்**

ஆம் ஆத்மி கட்சி அவர்கள் அவர்களுக்கே வழங்கிக்கொண்ட உரிமை என்று நாங்கள் நினைக்கும் ஒன்றுக்காக பெரு மகிழ்ச்சி கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்பு சட்டம் இந்த நாட்டில் யாருக்குமே வழங்காத உரிமையாக இது தோன்றுகிறது. மாற்று அரசியலை வழக்கும் போர்வையில் எதிராளிகள் மீது பழி சுமத்துதல் மற்றும் போலியான குற்றங்களைசாட்டுவதற்கான அடிப்படை உரிமையை அவர்களுக்கு அவர்களே வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். .நம்பகத்தன்மை, அங்கீகாரம் மற்றும் உடனடி கவனம் ஆகியவற்றைப் பெறுவதற்கான அவசரத்தில் போகிறபோக்கில் பா.ஜ.கவின் மேன்மை தாங்கிய தலைவர்கள் பெயரை இழுப்பதற்குத் தயங்குவதில்லை. ஆனால் இது முற்றிலும் கண்டிக்கத்தக்கதாகும். பா.ஜ.க தலைவர்கள் மீது குற்றம் சுமத்தும் ஆம் ஆத்மி கட்சி தலைவர்கள் அதற்கான போதுமா தடயவியல் ஆதாரங்களுடன் அவர்கள் கூறியவற்றை நிரூபிப்பதில்லை. இது பழி சுமத்துதல், போலி பிரச்சாரம் மற்றும் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் குற்றம்சாட்டுதல் ஆகியவற்றின் எல்லைகளைத் தொடுவது தெளிவாகிறது.

ஆம் ஆத்மி கட்சி தாங்கள் 'திருடர்கள்' என்று அழைத்த ஊழல்மய காங்கிரஸின் ஆதரவைப் பெறத் தயங்கவில்லை. தன் குழந்தைகள் மீது ஆணையாக காங்கிரஸ் ஆதரவுடன் அரசமைக்கமாட்டேன் என்று உறுதிமொழி அளித்த தில்லி முதல்வர் இப்போது தான் சொன்னவற்றிலிருந்து அனைத்து வகைகளிலும் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்.

· அவர்கள் ஊழல்மய காங்கிரஸின் ஆதரவுடன்தான் ஆட்சியில் நீடிக்கிறார்கள்.

· அவர்களது விருப்பம்போல் மாற்றியமைக்கக் கூடிய ஊழல்வாதிகள் பட்டியலில் ஷீலா தீக்ஷித்தின் பெயரைச் சேர்க்கும் துணிச்சல் அவர்களுக்கு இல்லை.

· இன்று வரை காங்கிரஸ் மற்றும அதன் தலைமைக்கு எதிராக ஆம் ஆத்மி கட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இப்போது அவர்கள் மக்களிடமிருந்து ஆதாரங்களைக் கேட்கிறார்கள். இதே போல் பதவிக்கு வருவதற்குமுன், ஆதாரங்களுடன்தான் குற்றம்சாட்டினார்களா?

· தில்லியில் மின்சார கட்டணங்கள் உயர்ந்துகொண்டிருக்கின்றன ஆம் ஆத்மி கட்சி அளித்த வாக்குறுதிகள் எங்கே?

· தில்லியில் பால் விலை உயர்ந்திருக்கிறது. தில்லியில் இது ஏன் நடந்துகொண்டிருக்கிறது என்று காங்கிரஸும் ஆம் ஆத்மி கட்சியும்தான் விளக்க வேண்டும்.

· உகாண்டாவிலிருந்து வந்து தங்கியிருப்பவர்களை சோதனையிட்ட ஆம் ஆத்மி கட்சி எங்கே? வடகிழக்கிலிருந்து வரும் நமது சகோதரர்களுக்கு உதவி செய்யாதது ஏன்?

நிறுவனமயப்படுத்தப்பட்ட நிர்வாக பொறிநுட்பத்தின் வழியாக தில்லியை ஆள்வதில் ஆம் ஆத்மி கட்சியினர் தங்கள் முழுக் கவனத்தையும் குவிக்க வேண்டும் என்பதை பா.ஜ.க சுட்டிக்காட்ட விரும்புகிறது. ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாத கவர்ச்சிகரமான பட்டியல்கள் அல்லது போலி

குற்றச்சாட்டுகள நிறைந்த செய்தியாளர் கூட்டங்களை தினமும் நடத்துவது நல்லாட்சியைத் தந்துவிடாது . இந்த புது அரசு பதவியேற்றதிலிருந்து தில்லி மக்கள் இன்னும் மோசமான கையறு நிலையில் இருப்பதாக உணர்கிறார்கள்.

**(பொறியாளர் அருண் குமார் ஜெயின்)**
*அலுவலக செயலாளர்*